2004 பிப்ரவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் முதலில் அமைச்சரையும் என்னையும் அழைத்துக்கொண்டு போய் அந்த இடத்தைக் காட்டியதற்குப் பிறகுதான் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கிராமம், கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் காணாமல் போனது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆஸ்டின் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ஆஸ்டின்.

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லுகின்றபொழுது அவர்களின் பாதுகாப்பிற்காக 10,000 life jackets வழங்குவதற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும்....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின், வாசகங்களை மட்டும் படிக்க வேண்டும், அவ்வளவுதான்.

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி மீனவர் கிராமத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது காணாமல் போனது” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. எம். ராதாகிருஷ்ணன்] [2004 பிப்ரவரி 13

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கிராமத்தைச் சேர்ந்த திருவாளர்கள் (1) ரெம்ஜியூஸ், (2) ததேயூஸ் (3) ஜான் மற்றும் (4) வின்சென்ட் ஆகியோர் 21-12-2003 அன்று வல்லத்தில் மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் மறுநாள் காலையில் கரை திரும்பியிருக்க வேண்டும். கரை திரும்பாததால், இவர்களை இந்திய கடலோரக் காவல் படை மற்றும் இந்திய கப்பல் படை ஆகியவற்றின் துணை கொண்டு 22-12-2003 மற்றும் 23-12-2003 ஆகிய நாட்களில் கடலோரக் காவல் படையின் கப்பல் மூலம் தேடியும் 24-12-2003 அன்று கடலோரக் காவல் படையின் விமானம் மூலம் தேடியும் இவர்களைப்பற்றி எந்தவிதமான தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

26-12-2003 அன்று மத்திய அரசின் வெளிவிவகாரத் துறை அமைச்சகம் மூலமாக இலங்கை மற்றும் மாலத்தீவுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் தொடர்புகொள்ளப்பட்டு காணாமல் போன 4 மீனவர்கள் குறித்து தகவல்கள் ஏதுமிருப்பின் சேகரித்தும் ஒருவேளை தங்களது வல்லத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டு சர்வதேச கடல் எல்லை தெரியாது அந்நாடுகளின் கடல் எல்லைக்குள் செல்ல நேரிட்டு அந்நாடுகளின் கடலோரக் காவல் படையினரால் கைப்பற்றப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தால் அவர்களை மீட்டு உடனே தாயகம் திருப்பி அனுப்ப தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் இன்று வரையிலும் இம்மீனவர்கள் குறித்த தகவல்கள் ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்றபொழுது அவர்களின் பாதுகாப்பிற்காக 10,000 life jackets வழங்குவதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், மீனவர்களுக்கு இந்த நிதி ஆண்டிலே 4,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ரூ.15.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், மீனவர்களைப் பாதுகாக்கும் பாதுகாவலராக தமிழகத்தை வழிநடத்திச் செல்லுகின்ற மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மீனவர்கள் சார்பிலே முதற்கண் என்னுடைய நன்றியினைப் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

2004 பிப்ரவரி 13] [திரு. ஆஸ்டின்]

21-12-2003 அன்று மாலை *5—30* மணிக்கு மேலமணக்குடி மீனவ கிராமத்தைச் சேர்ந்த ரெம்ஜியூஸ், ததேயூஸ், ஜான், வின்சென்ட் ஆகிய நான்கு மீனவர்களும் லம்பாடினி எஞ்ஜின் பொருத்தப்பட்ட பிளைவுட் வல்லத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் இதுவரை கரை சேரவில்லை. அவர்கள் *22-12-2003* காலை *8* மணிக்குள்ளாக கரை திரும்பியிருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் கரை திரும்பாததால், இந்தப் பிரச்சினை உடனடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு மீனவளத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டு, அரசு துரித நடவடிக்கையினை மேற்கொண்டு கடலோரக் காவல் படை வாயிலாக கப்பல் மூலமாகவும் பின்னர் விமானம் மூலமாகவும் தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்றும் இதுவரை அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மீனவர்களின் உயிர் பாதுகாப்பிற்காக, ரோந்துப் பணிக்காகவே வாங்கப்பட்ட 'வலம்புரி' என்ற விசைப் படகு தற்போது பழுதுபட்ட நிலையிலே கன்னியாகுமரியிலே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பழுதுபார்த்து தினமும் பயன்படுத்தும் வகையிலே உள்ளூர் மீனவர்களை அதிலே பணியமர்த்தினால் மீனவர்கள் காணாமல் போன தகவல் தெரிந்த உடனேயே இந்த விசைப் படகு மூலமாக அவர்களைத் தேடி கண்டுபிடிக்க முடியும்.

மேலும் பாதிக்கப்பட்ட இந்த *4* மீனவர்களின் வருமானத்தை நம்பித்தான் அவர்களது குடும்பம் வாழ்ந்து வந்தது... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆஸ்டின்: கடந்த $1\frac{1}{2}$ மாத காலமாக இவர்களது குடும்பத்தினர் மிகவும் வறுமையிலே, வாழ்வதற்கு வழியின்றி தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே மீனவர்கள் அண்டை நாட்டினரால் சிறை பிடிக்கப்பட்டால், அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக, அரசு தினமும் *50* ரூபாய் வழங்குவதற்கு விதி இருக்கின்றது.

[திரு. ஆஸ்டின்] [2004 பிப்ரவரி 13

முற்பகல் 11-25

அதுபோல காணாமல்போன இந்த நான்கு மீனவர்களுடைய குடும்பத்திற்கும், இதனைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, விதியினைத் தளர்த்தி, தினமும் 50 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கிடவும், ஏற்கெனவே, அழிக்கால் மீனவர் கிராமத்தைச் சார்ந்த 13 மீனவர்கள் காணாமல் போனபோது, இதய தெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, அவர்களுக்கு உதவி வழங்கி, அவர்கள் குடும்பங்களைப் பாதுகாத்ததுபோல, இதனையும் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு பரிசீலித்து, பாதிக்கப்பட்டுள்ள நான்கு மீனவர்கள் குடும்பங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலேயிருந்து உதவி வழங்கி, அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாத்திட கேட்டு, இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த உதவிகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கிராமத்தினைச் சேர்ந்த திருவாளர்கள் ரெம்ஜியூஸ், ததேயூஸ், ஜான், வின்செண்ட் ஆகிய நால்வரும், 21-12-2003 அன்று வல்லத்தில் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் மறுநாள் காலை கரை திரும்பி இருக்க வேண்டும். கரை திரும்பாததால், அவர்களை, இந்திய கடலோரக் காவல் படை மற்றும் இந்திய கப்பல் படை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. அவர் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள், போதும்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே, அழிக்கால் கிராமத்திலே பாதிக்கப்பட்ட 10 மீனவர்களுக்கு இதுபோன்ற நிவாரணத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதேபோன்று 4 மீனவர்களுடைய நிலைமையையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதோடு காணாமல்போன 4 மீனவர்களுடைய குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நிவாரண நிதியிலேயிருந்து தலா ரூபாய் 50 ஆயிரம் நிதி வழங்கக் கோரி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், தனது கடித எண் சி 3/84845/2003, நாள்

2004 பிப்ரவரி 13] [திரு. எம். ராதாகிருஷ்ணன்]

1-2-2004-இன்மூலம், சென்னை சிறப்பு வருவாய் நிர்வாக ஆணையருக்குப் பரிந்துரை செய்துள்ளார். அம்மா அவர்களுடைய அரசு இதைக் கனிவோடு பரிசீலிக்கும். மீன் துறை மூலமாக வழங்கப்படும் நிவாரணத்தைப் பொறுத்தவரையில், காணாமல் போன 4 மீனவர்களில், 3 மீனவர் குடும்பங்களுக்கு தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம், புதுடில்லி மூலம் வழங்கப்படவுள்ள தலா ரூபாய் 50 ஆயிரத்தைப் பெற்றுத்தர தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ததேயூஸ் என்பவர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இல்லாததால், தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்தின் நிதியுதவியைப் பெறத் தகுதியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுத் தொண்ணூற்று ஆறு முதல் இருநூற்று நான்கு வரையிலான ஒன்பது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான, பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்திரண்டு மற்றும் நூற்று நாற்பத்து மூன்று ஆகிய இரண்டு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. லா. சந்தானம்.